# சைவத் தமிழ்ச் சங்கம்
# அருள்மிகு சிவன் கோவில்

www.sivankovil.ch, www.sivantv.com

## 15 வயதுப் பிரிவு

### தேவார மனனப்போட்டி

**இலங்கை மன்ன னிருபது தோளிற**
**மலங்க மால்வரை மேல்விரல் வைத்தவர்**
**நலங்கொள் நீற்றர்நள் ளாறரை நாடொறும்**
**வலங்கொள் வார்வினை யாயின மாயுமே.**

பொழிப்புரை:
இலங்கை மன்னனாகிய இராவணன் இருபது தோள்களும் இற்று மனஞ் சுழலும்படியாகத் திருக்கயிலாயப் பெரு வரையின் மேல் திருவிரல் ஊன்றியவரும், நன்மை மிகுந்த திரு நீற்றருமாகிய நள்ளாறரை நாள்தோறும் வலம் வந்து வணங்குவார் வினைகள் மாயும்.

பண்: நட்டபாடை

**மூவரென இருவரென**
**முக்கண்ணுடை மூர்த்தி**
**மாவின்கனி தூங்கும்பொழில்**
**மாதோட்டநன் னகரில்**
**பாவம்வினை யறுப்பார்பயில்**
**பாலாவியின் கரைமேல்**
**தேவன்எனை ஆள்வான்திருக்**
**கேதீச்சரத் தானே.**

பொழிப்புரை:
மூன்று கண்களையுடைய மூர்த்தியாகிய, திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமான், மாமரங்களின் கனிகள் தாழத் தூங்குகின்ற சோலைகளையுடைய, ஹ மாதோட்டம் ஹ என்னும் நல்ல நகரத்தில் பாவத்தையும், இருவினைகளையும் அறுக்க விரும்புவோர் பலகாலும் வந்து மூழ்குகின்ற பாலாவியாற்றின் கரைமேல், மூவராகியும், இருவராகியும், முதற்கடவுளாகியும் நின்று, என்னை ஆள்பவனாய்க் காணப்படுகின்றான்.

## திருவாசக திருமந்திர மனனப்போட்டி - **15 வயதுப் பிரிவு**

**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்**
**சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து**
**போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்**
**ஏதேனு மாகாள் கிடந்தாள்என் னேயென்னே**
**ஈதேஎந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.**

பொழிப்புரை:
ஒளி பொருந்திய நீண்ட கண்களை உடைய பெண்ணே! முதலும் முடிவும் இல்லாத அரும் பெருஞ்சோதியை யுடைய இறைவனை நாங்கள் பாடுவதைக் கேட்டும், உறங்குகின்ற னையோ? உன் காது ஓசை புகாத வலிய காதோ? மகாதேவனுடைய நெடிய சிலம்பணிந்த திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிய வாழ்த்துப் பாடல்களின் ஒலி சென்று, தெருவின் கண் கேட்ட அளவிலேயே, எங்கள் தோழி ஒருத்தி பொருமி அழுது, உடம்பை மறந்து மலர் நிறைந்த படுக்கையின் மீதிருந்து புரண்டு விழுந்து இந் நிலத்தே, ஒன்றுக்கும் ஆகாதவள் போல மூர்ச்சித்துக் கிடந்தாள். இ·து அவள் தன்மை என்ன வியப்பு!

**புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்**
**பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்**
**என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட**
**ஈசனே மாசிலா மணியே**
**துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்**
**தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ**
**இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே.**

.
பொழிப்புரை:
அற்பமாகிய புலால் உடம்பு, மயிர்க்கால்தொறும் நெகிழ்ச்சியையுடைய அது, பொன்னாலாகிய பெரிய கோயிலாகும் படி, அதனுள் எழுந்தருளியிருந்து, என்னுடைய எலும்புகளை யெல்லாம் உருகும்படி செய்து, எளியவனாகி ஆட்கொண்டருளிய ஆண்டவனே! குற்றமற்ற மாணிக்கமே! துன்பமும் பிறப்பும் இறப்பினோடு மயக்கமும் ஆகிய பற்றுக்களெல்லாம் அறுத்தருளின மேலான சோதியே! ஆனந்தமே! உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?

**தவம்செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்**
**சிவன்றன் விரதமே, சித்தாந்தக் கேள்வி,**
**மகம்சிவ பூசைஒண் மதிசொல் ஈரைந்து**
**நிவம்பல செய்யின் நியமத்த னாமே.**

பொழிப்புரை:
தவம் முதலாக மதி ஈறாகச் சொல்லப்பட்ட பத்தினையும் நியமமாகக் கொண்டவன் நியம யோகியாவான்.

- திருக்குறள் ஏழாம் அதிகாரம்
- பேச்சுப்போட்டி **“சைவத் தமிழ்ச் சங்கம்”** சுயதேடல்.
  (6 - 7 நிமிடம்)

அன்பார்ந்த பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.